# ஒரு குடும்பம் இயேசுவைத் தன் வீட்டில் ஆராதித்தது

கீழ்க்காணும் சிறுவர் கல்வி செயல்பாடுகளில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்க.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, தங்கள் வீடுகளில் மக்களைக் கூட்டி, அவர்களுக்கு இயேசுவைப் பற்றி கூறி, உம்மை ஆராதிக்க விசுவாசிகளுக்கு உதவுவீராக!"

பிலிப்பிய சிறைச்சாலைக்காரனைப் பற்றிய கதையை **அப்.16:22-36**ல் இருந்து ஒரு **பெரிய பிள்ளையோ** அல்லது ஆசிரியரோ வாசிக்கட்டும். அல்லது மனப்பாடமாகக் கூறட்டும். இது, எவ்வாறு ஒரு குடும்பம் தங்கள் வீட்டில் தேவனை ஆராதித்தது என்பதைக் காட்டுகிறது.



கதையைக் கூறிய பின், பின்வரும் கேள்விகளைக் கேட்கவும். *(பதில் ஒவ்வொரு கேள்விகளுக்கும் பின்னால் வருகிறது).*

- அரசாங்க அதிகாரி பவுலையும் சீலாவையும் எவ்வாறு நடத்தினான்? *(23-24)*
- நடு இரவில் சிறைச்சாலைக்குள் பவுலும் சீலாவும் என்ன செய்து கொண்டு இருந்தனர்? *(25)*
- சிறைச்சாலைக்காரன் ஏன் தற்கொலை செய்து கொள்ள விரும்பினான்? *(26-27)*
- சிறைச்சாலைக்காரன் தனக்கும் தன் குடும்பத்துக்கும் எவ்வாறு இரட்சிப்பைக் கண்டடைந்தான்?
- இரவில் எந்த சமயத்தில் சிறைச்சாலைக்காரனும் அவன் குடும்பத்தாரும் ஞானஸ்நானம் பெற்றனர்? *(வச. 25 & 32-34).*

சிறைச்சாலைக்காரனின் கதையில் சில பகுதிகளை **நாடகமாக்கவும்.**

- சபைத் தலைவரோடு பேசி பிள்ளைகள் இந்த சிறு நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்யவும்.
- உங்கள் நேரத்தைக் குழந்தைகளோடு செலவிட்டு இந்த நாடகத்தை தயாரிக்கவும். எல்லா பகுதிகளையும் பயன்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை.
- **பெரிய பிள்ளைகள்** ஆயத்தம் செய்வதில் சிறியவர்களுக்கு உதவ வேண்டும்.
- **பெரிய பிள்ளைகளோ அல்லது பெரியவர்களோ** கீழ்வரும் பாத்திரங்களை ஏற்கலாம்.

  பவுல்

  **சிறைச்சாலைக்காரன்,** விலங்கைக் குறிக்க இரண்டு கயிறுகளும், வாளைக் குறிக்கும் படியாக ஏதாவது ஒன்றையும் வைத்துக் கொள்ளவும்.

  **கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறவும். ஒரு மேசையின் விளிம்பில் கற்களையோ புத்தகங்களையோ குவித்து வைத்துக் கொள்ளவும்.

- **சிறிய பிள்ளைகள், சீலா, அதிகாரி, கைதிகள், சிறைச்சாலைக்காரனின் குடும்பத்தார்** ஆகிய வேடங்களை ஏற்கட்டும்.

**கதை கூறுபவர்:** அப். 16:22-28 ல் இருந்து கதையின் முதற்பகுதியைக் கூறவும். பின் கூறுவது, "அதிகாரி என்ன கூறுகிறான் என்று கேளுங்கள்."

**அதிகாரி** : "சிறைச்சாலைக்காரனே! பவுலையும் சீலாவையும் சிறையிலே போடு! அடித்து, கவனமாகக் காவல் வை!"

**சிறைச்சாலைக்காரன்:** கைகளை சங்கிலியில் பிணைக்கிறான் (முடிச்சு போட வேண்டாம்) பின் கூற வேண்டியது, "நான் உள் அறையில் இவர்களை சங்கிலியால் கட்டி என் உயிரைக் கொடுத்து காவல் காப்பேன்."

**பவுலும் சீலாவும்:** ஒரு மேசையின் அடியில் அமர்ந்து பாட்டுப்பாடுகிறார்கள்.

**சிறைச்சாலைக்காரன்:** "ஆ! நிலநடுக்கம்!" (மேசையை அசைக்க அதன் மேல் இருந்த கற்கள் அல்லது புத்தகங்கள் கீழே விழுகின்றன),

**பவுலும் சீலாவும்:** "சங்கிலியை" எடுத்துப் போட்டு விட்டு எழுந்து நிற்கவும்.

**கைதிகள்:** "ஆகா! நாம் விடுதலை ஆகி விட்டோம்! கதவுகள் எல்லா திறந்து கிடக்கின்றன!."

**சிறைச்சாலைக்காரன்:** வாளை உயர்த்தியபடி கூறுகிறான், "ஐயோ! கைதிகள் ஒடி விட்டனர்! நான் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை!"

**பவுல்** : (சத்தம் போட்டு) "ஐயா! நீர் தற்கொலை செய்து கொள்ள வேண்டாம், நாங்கள் யாவரும் இங்கேயே இருக்கிறோம்!"

**கதை கூறுபவர்:** அப். 16:29-33 லிருந்து கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். பின்னர்: "சிறைச்சாலைக்காரன் என்ன கூறுகிறான் என்று கேளுங்கள்."

**சிறைச்சாலைக்காரன்:** "ஒரு விளக்கைக் கொண்டு வாருங்கள். நான் பவுலையும் சீலாவையும் பார்க்க வேண்டும்!" பின் பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக மண்டியிட்டு சத்தமாகக் கேட்கிறான், "நான் இரட்சிப்படைய என்ன செய்ய வேண்டும்?"

**பவுல்** : "கர்த்தராகிய இயேசுவை விசுவாசி. அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவீர்கள்!"

**சிறைச்சாலைக்காரனின் குடும்பத்தார்:** "நாங்களும் இயேசுவை விசுவாசிக்க விரும்புகிறோம்."

**சிறையதிகாரி:** "நான் உங்கள் காயத்தை கழுவுகிறேன். பின் இன்றிரவு நாங்கள் யாவரும் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்வோம்."

**கதை கூறுபவர்:** கதையின் மூன்றாவது பகுதியை அப்.16:34-36 ல் இருந்து கூறவும். பின் கூறவேண்டியது, "சிறையதிகாரி பவுலிடமும் சீலாவிடமும் என்ன கூறினார் என்பதைக் கேளுங்கள்."

**சிறையதிகாரி:** "என்னுடைய முழுக் குடும்பமும் விசுவாசித்து ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டதால் நான் மகிழ்ச்சியால் நிரம்பி உள்ளேன். வாருங்கள்! என்னுடைய வீட்டில் விருந்து சாப்பிடலாம்.!"

**அதிகாரி** : மேசையின் மேல் தட்டி கூறுகிறான். "வணக்கம், சிறையதிகாரியே! நீங்கள் பவுலையும் சீலாவையும் விடுவித்து விடலாம்."

**சிறையதிகாரி:** "சகோதரர்களே! இயேசுவைப் பற்றிய நற்செய்தியை எங்கள் குடும்பத்துக்கு கொண்டு வந்ததற்காய் நன்றி கூறுகிறேன். சமாதானத்தோடு போய் வாருங்கள்!"


**கதை கூறுபவர் அல்லது ஒரு பெரியபிள்ளை:**

நாடகம் முடிந்த உடன் அதற்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறவும்.

**கேள்விகள்:** பிள்ளைகள் இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக்காட்டினால், மேலே உள்ள கேள்விகளைப் பெரியவர்களிடம் கேட்கவும்.

**பிள்ளைகளைக் கேட்க வேண்டியது:** தேவனை நமது வீடுகளில் ஆராதித்து சேவிக்கும் வழிகள் பற்றிய உதாரணங்களைத் தருக.

**படம்:** உங்கள் நகரத்தில் பொதுவாக இருக்கும் ஒரு வீட்டின் படத்தை வரைக. அதை ஆராதனை வேளையில் பெரியவர்களுக்குக் காட்டி, நாம் தேவனை வீடுகளிலும் எவ்விடத்திலும் ஆராதிக்கலாம் என்று விளக்குக.



**மனப்பாடம்:** யோவான் 4:24.

**சங்கீதம்** 136:1-6ஐ இரண்டிரண்டு வசனமாக மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும். "அவர் கிருபை என்றும் உள்ளது" என்ற சொற்றொடரை முழு கூட்டமும் திரும்பவும் கூறவும்.

வீடுகளில் கூடி ஆராதிப்பது பற்றி கவிதை அல்லது பாடலை பெரிய பிள்ளைகள் எழுதட்டும்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, உம்மை எங்கும் எப்போதும் ஆராதிக்க முடிவதால் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் மிகவும் சிறிய குழுவாக இருப்பதால் ஒன்றுமில்லை, எங்கள் முழுக்குடும்பத்தையும் உம்மிடமாக அழைத்துக் கொண்டதால் நன்றி செலுத்துகிறோம். எங்கள் முழு இருதயத்தோடும் உம்மை ஆராதிக்க உதவி செய்யும்."

**நீங்கள் பிள்ளைகளுக்கு போதிக்கிறவரா?**

**சிறுவர்களின் ஆசிரியர்களுக்கான A0b என்ற ப-தீ பாட வழி காட்டியை படிக்கவில்லை என்றால் இப்போதே படியுங்கள்.**

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net